உ

சிவமயம்.

கணபதி துணை.

பினாங்கு
தண்ணீர்மலை வடிவேலர்

# காவடிச்சிந்து.

இஃது
ஸ்ரீலஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவரும்
மதுரை ஜில்லா நாச்சியார் புரம்
ராம. வேங்கடாசலச் செட்டியாரவர்கள்
குமாரருமாகிய
இராமநாதச்செட்டியாரால்
இயற்றப்பட்டு

:O:

பினாங்கில் வசிக்கின்ற
நாட்டுக்கோட்டை நகரத்தாரால்


பினாங்கு,
"கிறிட்டேரியன் அச்சியந்திரச்சாலையில்"
பதிப்பிக்கப்பட்டது.

சார்வரி ஸ்ரீ மார்கழி மீ
1901-ஸ்ரீ ஜெனவரி மீ



ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P O.
RAMNAD DIST.

உ

சிவமயம்.

கணபதிதுணை.

பிறங்கு

தண்ணீர்மலை வடிவேலர்

# காவடிச்சிந்து.

காப்பு.

பூவரு மயனுமாலும் புரந்தரன் முதலாயுள்ள
தேவரும் பரவத்தண்ணீர்ச் சிகரியி லமருஞ்செவ்வேட்
கோவருந் தமிழ்ப்பாச்சிந் தொன்றுரைசெய வுணர்வுக்கெட்
மூவரின் மேலாம்வேழ முகத்தனை யகத்துள்வைப்பாம். (டா

———:0:———

நூல்.

திரு மாமேவு புனல்வரையில் வாசன் நாளும்
வந்தித்து வணிகேசர் சிந்திக்கு நேசன்
மிக்க தூமேவு மதிமுக விலாசன் கோடி
சூரியரு நாணவொளி யாருமுரு கேசன் (1)
மலை நங்கையுமை பெற்றகுண சீலன் முக்க
ணுதனுக் குபதேச மோதுமனு கூலன்
தெய்வ கங்கையா டந்தவர பாலன் வட்டக்
கடன்மலையொ டவுணருயிர் கெடவெறியும் வேலன்
திரு மாலயன் வணங்குமிரு தாளன் மிக்க
மாறில்வலி பெற்றுடைய வீராறு தோளன்
மணக் கோலமிகு வள்ளிமண வாளன் அன்பர்
கூட்டத்தி லாருநெறி காட்டுமரு ளாளன் (3)
புகழ் மிக்கதன வணிகர்பணி தூயன் தண்ணீர்
வெற்பினி லிருந்தருள்செ யற்புத சகாயன்

கவின் தக்ககுமு தம்புரை செவ்வாயன் தெய்வத்
தந்திமுக னுக்கிளைய கந்தனரு ணையன் (4)
தேவர் வானாடு காத்தருள்செய் மெய்யன் வெற்றி
மாறாத வேல்கொண்ட வீராறு கையன்
இசைத் தேனார் கடம்புபுனை துய்யன் கண்டு
சிந்திக்கு மன்பரை யுகந்தருளு மெய்யன் (5)
இந்தக் கோலப் பினாங்கென்னும் பதியான் தன்னைக்
குறுகுமடி யார்கட்கு மறுசனனம் விதியான்
மிக்க சீலத் துயர்ந்தநவ நிதியான் வந்து
தெரிசிக்கு மடியவர்க் கருளுநற் கதியான் (6)
குளிர் புனல்வரையை யிடமாக வுடையான் வாசப்
பூமலிந் திடுநீப மாமலர்த் தொடையான்
வெங் கனலுட் கநிலவயிற் படையான் ஏற்ற
கருதலர்க ளோடுசமர் பொருவதற் கிடையான் (7)
நாளும் நச்சியிமை யவர்கடுதி கந்தன் பாவ
நாசகன் கயிலாச வாசரருண் மைந்தன்
புள்ளிப் பச்சைமயி லேறுமா னந்தன் நாளும்
பரவும்வணி கேசர்க்கு வரமுதவு சொந்தன் (8)
தெய்வ நன்னீர் மலைக்குமரன் மீதே சிந்து
நல்லியற் றமிழினாற் சொல்லவிப் போதே
வளந் துன்னுமுறம் போலவிரு காதே கொண்ட
தும்பிமுக னடிகளை லகின்புதவல் யாதே (9)
திரு வெண்ணீ றணிந்திலகு மங்கன் வேத
வித்தகன நாதிமல முத்தன களங்கன்
கங்கன் புண்ணிய னுமாதேவி பங்கன் ஞான
போதகன் வெள்ளைவிடை மீதில்வரு துங்கன் (10)
பொற் தடவரை தனைக்குனிசெய் வில்லி பாத
தாமரை வணங்கியவன் வாமமது புல்லி
பல இடர்கெட நமக்கருள்செய் வல்லி தாளி
னிணைமலர் வணங்கியவள் குணமகிமை சொல்லி
தமிழ் வருகாழி முனியடி துதித்து முடியில்
வாக்கரையர் செய்யபொற் பூக்கழல் பதித்து

நங் திருநாவ லூரினி லுதித்து முதலை
தின்றமதலைக்கருள்செய் தொண்டரை மதித்து (12)
நல்ல திருவாச கத்தமிழ்கள் பாடி யருள்
சேர்ந்ததிரு வாதவூர் வேந்தரைக் கொண்டாடி
நாளும் அருகாத சிவநெறியிற் கூடி வாழும்
ஆறுபத் தொருமூவர் சீறடிக ளுடி (13)
சற்றுங் கோணில்வண் டமிழ்மகிமை சாற்றி முடியிற்
கும்பமுனி வரனடிக ளன்பினொடு மேற்றி
கலை வாணிதிரு வடியின்மலர் தூற்றி தேவை
வன்றொண்ட தேசிகர்த மின்றொண்டு போற்றி (14)
மட அன்னங்கள் கண்டஞ்சு நடையாய் யிளையொன்
றாயிரம் பொன்பெற்ற சேயபட் டுடையாய்
வான மின்னஞ்சு கின்றசிற் றிடையாய் நீடும்
விரிதலைய ரம்பைநிகர் தருமிணைத் துடையாய் (15)
யாருஞ் சாற்றரிய தேவர்பைந் தருவே வானத்
தையலார் கண்டுபணி செய்யவள ருருவே
மணம் போற்றுமலரே மலரின் மருவே வாசப்
பூமகட் கிணையான காமசற் குருவே (16)
விண் அருந்ததி நிகர்த்தகற் புடையாய் வேணி
லங்கசன் கண்டுமகிழ் தங்குபொற் புடையாய்
மிகத் திருந்துபொற் பணியிலற் புடையாய் மார்பிற்
றிரண்டபூண் முலையென்னு மிரண்டுவெற் புடையாய்
குண சீலத்துயர்ந்த மட மானே மாதர்
செல்வமே நவரச மல்குசெந் தேனே
இந்தக் கோலப் பிறங்கின்வளம் யானே சிறிது
கூறுவேன் கேளடி தேறும்வகை தானே (18)
பெண்ணே நாற்றிசை யினுஞ்சலதி சூழும் இங்கு
நலமடைய லாமென்று பலவுயிரும் வாழும்
கங்கை ஆற்றினை நிகர்த்தருவி வீழும் வெற்பில்
ஆறுமுகன் மேவியருள் கூருவனை நாளும் (19)
புதிய மாஞ்சோலை தனிற்குயில்கள் கூவும் வேற்கை
வள்ளலார் புகழ்சொல்லிக் கிள்ளையதின் மேவும்

மலர்ப் பூஞ்சோலை தனின்முகில் கடாவும் ஒப்புப்
புகலுவோ மெனவெண்ணி னிகராது காவும் (20)
பூங் கன்னல்கமு கென்றுசிலர் கணிப்பார் கதலிக்
காட்டினைச் சிலர்தெங்கி னீட்டமெனக் குணிப்பார்
தேவர் பொன்னகர மிதுவென்று பணிப்பார் நாகர்
போற்றுமுல கென்றுசிலர் சாற்றிவரு ணிப்பார் ()
செம் பொன்னவிர் வெண்முத்தி னொடுநாகும் நீரிற்
பொங்கலை புரட்டநில மெங்கணும் போகும்
பசுஞ் செந்நெல்முப் போகம்விளை வாகும் அந்தத்
தீங்கதிற் குலைகடலை யோங்கிவிண் ணேகும் (22)
மலர் வாவியிற் கருமேதி தோயும் சஞ்ச
வாசநாண் மலரைமிக் காசையொடு மேயும்
அங்கு தாவிநெடு வாளைகள்விண் பாயும் அந்தச்
சார்பினூற் றெங்கினிள நீர்கள்புவி சாயும் (23)
முழு நீலவிழி யென்னுமிரு வாளாய் வேயை
நிந்தித் தருந்தொடி புனைந்தபைந் தோளாய்
இனி மேலுமி நகற்பெருமை கேளாய் தேவர்
மெச்சிய தொழிற்குரிய தச்சனெடு நாளாய் (24)
ஆய்ந் ஆய்ந்துபல மாடநிரை தொகுத்தான் தேவர்
அந்தரத்து றுசிகர பந்திகள் பகுத்தான்
கவின் வாய்ந்த சித்திரமதில் வகுத்தான் வேதன்
மற்றிவ னெனப்பலர்கள் சொற்றிட மிகுந்தான் ()
பொன் நிரைசெய்மணி மண்டப மமைத்தான் மாதர்
நின்றுவிளை யாடல்புரி குன்றுகள் சமைத்தான்
மிளிர் அரதனத் தெற்றிக டமைத்தான் கண்ட
ஆயிரங் கண்ணுடைய நாயகனி ளைத்தான் (26)
மிக மின்னொளி ததும்புகடை வீதி வேத
வேதியரி ருக்கைமுறை யோதுமனு நீதி
மன்ன மன்னரிட முருகரனு பூதி பெற்று
வாழ்வணிக ரில்ல [illegible] (27)
தன் மாந்தரிட முஞ்செய்து வைத்தான் சூழ
மஞ்சினம் படியுமுய ரிஞ்சிக ளமைத்தான்

யிதனைத் தேர்ந்துபொன் னுலகையரி கைத்தான் ஆதி
சேடனிந் நகர்மகிமை பாடிநின் றெய்த்தான் (28)

மலர் இந்திரை நிகர்த்தபொற் சிலையே மேலும்
இந்நகர்க் குடதிசையின் மன்னுமொரு மலையே
உயர் விந்தகிரி யொக்குமத னிலையே யன்றி
வேறுமுவ மானங்கள் கூறுதற் கிலையே (29)

பல தேவரதி லேசஞ் சரிப்பார் கருடர்
சித்தர்கின்ன ரருரகர் நித்தந் தரிப்பார்
அங்கு மேவும்வடி வேலனை மரிப்பார் கந்த
வேளரிய புகழ்சொலியெ நாளும் விரிப்பார் (30)

வானில் மண்டுமுகில் வரைமுழை படுக்கும் வச்ர
மாமணிக் கோடுகளில் வான்மதி யடுக்கும்
கண்ணிற் கண்டவர் பவத்தொடர் கெடுக்கும் கண்டு
கைக்கொடு வணங்கினுயர் மெய்க்கதி கொடுக்கும்

தேவர் பொருவிலமு தெனவருவி பொழியும் ஆங்கு
போய்ப்படிந் தாடினோர் தீப்பவஞ் சுழியும்
ஒருகாற் பருகினல் வெவ்வினைக ளொழியும் பஞ்ச
பாதகஞ் சுழியுமென வேதமே மொழியும் (32)

அங்கண் மேவுமத வாரணத் தோடும் சிங்கம்
வேடிக்கை யாகவே கூடிவிளை யாடும்
நல் ஆவொடு வரிபபுலிகள் கூடும் அங்க
ணோடுமயி லைப்பணிகள் கூடியே தேடும் (33)

மானே இந்தவள முறுமலையில் விருப்பன் நங்க
ளேகனிளை மடமாதர் பாகனுயர் பொருப்பன்
நங்கள் தந்திமுக னெந்தையொரு மருப்பன தம்பி
சத்திவேல் வடிவமாய் நித்தலு மிருப்பன் (34)

சாற்றும் அம்மலைக் கருகிலடி மானே காமன்
அங்கமே நவரசம் பொங்குசெந் தேனே
நமது விம்மலை யகற்றுமுரு கோனே மேவ
விருப்பொடு சமைத்தனர் திருத்தளிக டானே (35)

இந்த நிலமீது கனகம் படுத்து இந்த்ர
நீலத்தி னன்மதில்கள் சாலத் தொடுத்து
ஒளிர் பலகணிக ளங்கங் கெடுத்துப் பல
பலசித்தி ரங்களதி னிலவக் கொடுத்து (36)

நீண்ட மாணிக்கத் தூண்கள்பல நாட்டி இந்த
மாதிரம் பெறுதுகிர்ப் போதிகைகள் கூட்டி

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P O.
RAMNAD DIST.

நல் ஆணிப்பொன் னுத்திரம் பூட்டி வச்சி
ரங்கொண் டமைத்திடுகொ டுங்கைபல மாட்டி (37)

மிக்க மாற்றுயர்ந் திடுசெம்பொ னாய்ந்து தூய
வானத்தி னளவுறுவி மானத்தை மேய்ந்து

பாரும் போற்றுமணி யாற்சிகரம் வேய்ந்து வணிகர்
புனிதமொடி யற்றினர்க ணனிமகிழ்வு தோய்ந்து )

அந்தத் திருக்தளியி லவுணரிறை யங்கம் கூறு
செய்தவே ளினிதமர வெய்தரிய தங்கம்

மிக அருத்தியொடு ருக்கியணி சிங்கம் தாங்கும்
ஆதன மமைத்தனர்க ளீதுவெகு துங்கம் (39)

அந்த முடங்குளைய ரித்தவிசின் மீதே ஐந்து
முகமுடைய பரனுதவு குகனுமக லாதே

பல மடங்கலொத் துறைவனடி மாதே அந்த
வள்ளலார் கொலுமகிமை விள்ளுவனிப் போதே (

தமது இருபாலு மிருபெண் கடுன்ன வெற்றி
யேறும்வடி வேல்பால சூரியரின் மின்ன

எங்கள் கருவாதை கெடவருள்செ யென்ன அன்பர்
கைதலை முகிழ்த்தடிமை செய்துதுதி பன்ன (41)

ஓர் ஆறுமா மணிமுடி யிலங்க மார்பில்
ஆரதன மணிக்கோவை தரளந் துலங்க

முன்னாள் மாறுபடு சூர்க்கடல் கலங்க வென்ற
மாவயிற் கரனடியர் தீவினை விலங்க (42)

வேத பூசுரர்க ளால்வேதம பாட மாலும
பூமகனு மொத்துவெண் சாமரைகள் போட

விண் ஆசிலர மாதர்நட மாட நார
தாதிமுனி வரரிசையின் மீதுமன நாட (43)

வான தேவர்பூ மழைமாரி தூற்ற தேவ
தேவனே யென்றுதுதி யாவருஞ் சாற்ற

பணி பாவலர்மெய்ப் புகழ்பாடித் தேற்ற இப்
படிமுழுது மாளகின்ற முடிமன்னர் போற்ற (44)

பூண்ட செங்கடம் பெங்குமண நாற மிக்க
சேவலங் கொடிநின்று கூவுகுரன் மீற

முன்னாள் மங்குலிற் றேவர்குடி யேற வைத்த
வாழ்வே பராக்கென்று வேள்வியிறை கூற (45)

பெண்ணே வீற்றிருந் தருள்மகிமை பாரே இந்த
மிக்கபுவி மாதரிற் றக்கமட வாரே

கண்டு போற்றியனு பாய்மகிழ்வு கூரே கஞ்சப்
பூவடி வழுத்திவெந் தீவினைக டேரே (46)
வேறு ஒப்பின்முரு கையனருள் கூறும் மேன்மை
யுற்றவணி கேசர்முதன் மற்றுமுள் ளோரும்
மகர தைப்பூச நாள்வந்து சாரும் தன்மை
தனையினி துணர்ந்துகந் தனைநினைந் தியாரும் (47)
மிகத் திவளொளி ததும்புபொன் சேர்த்து சித்ரத்
தேவடி வமைந்திலகு காவடிகள் வார்த்து
திகழும் நவமணிப் பன்னுங்கு கோத்துப் பட்டி
னற்கட்டு குஞ்சங்க ளேற்கவதி லார்த்து (48)
அதன் இருபாலு மயிலிறகு நாட்டித் தேவர்
இணர்மலர்க் காவினறு மணமாலை சூட்டி
நந்தம் முருகேச னுருவதனிற் றீட்டிக் கஞ்ச
முதல்வன்முத லமரரற் புதமுறக்காட்டி (49)
இசை தக்கதிரு வாதிரையி னன்று மிக்க
சால்பினர்க டவவிரத சீலராய் நின்று
புகற் மிக்கபுனல் வாவியிற் சென்று மூழ்கி
விமலபவம் வெய்யவினை மும்மலங் கொன்று (50)
நற் கதியருள்வெண் ணீறுமெய் புனைந்து கால
காலரரு ளக்கவட மாலிகை வனைந்து
சற்றும் மதியற்ற வசுரரை முனைந்து வென்ற
வையயிற் படைகொண்ட வையனை நினைந்து (51)
பாதம் போற்றியன் பாய்த்தியானம் பண்ணி ஞான
பூரணப் பொருளாகு மாறெழுத் தெண்ணி
ஐயன் வீற்றிருந் தருடளியை நண்ணி வேத
வித்தகா மெய்ஞ்ஞான கர்த்தனே மண்ணில் (52)
புகழ் ஓங்குதண் ணீர்மலைக் குகனே யால
முண்டருளு மாநீல கண்டர்திரு மகனே
நறும பூங்கமல நிகராறு முகனே சூரைப்
போர்க்களந் தனில்வென்ற தீர்க்கசே வகனே (53)
நல்ல சைவநிலை யிட்டசம் பந்தா அன்பர்
தமையா தரித்தருளு முமையுதவு மைந்தா
நான்கு தெய்வமறை தொழவரிய கந்தா மிக்க
சீதாபி ராமர்துதி பாதார விந்தா (54)
தேவ தேவனே யென்றுதுதி சொற்றார் முன்பு
சித்திரக் காவடியை வைத்துமகிழ் வுற்றார்

தம்மை மேவுபழ வினைமுழுது மற்றார், அன்பின்
மேலவர் வணங்கும்வடி வேலரருள் பெற்றார் (55)
கலைவச் சந்தனம் பனிநீரிற் கூட்டிக் கந்த
சாமிதனை யபிடேக நேமமுட னூட்டி
மிரு கந்தமலர் மாலைபல சூட்டி மகர
கண்டிகை சரப்பணிகள் கொண்டுநனி பூட்டி (56)
தூய நவரத்ன மிகுடந் தரித்து தேவ
நாயகனை யன்பரன் பாயலங் கரித்து
பரம சிவகுரவ னிவனென ஸ்மரித்து யாருஞ்
செப்புதற் கரியகுகன் மெய்ப்புகழ் விரித்து (57)
பகம் பொற்செம்பிற் சர்க்கரையை வார்த்தார் தக்க
பூசனைசெய் தேகாவித் தூசுமீப் போர்த்தார்
மிக் நற்சடா க்ஷிரமுத்ரை சேர்த்தார் யாரும்
நாவடித் துரைசெய்புகழ்க் காவடியி லார்த்தார்(58
நல்ல சர்க்கரைப் பொங்கலனி வைத்தார் தேவர்
தன்னெஞ்சு வப்பவினி தன்னஞ் சமைத்தார்
பழ வர்க்கவகை வேண்டுவ நிரைத்தார் தில்லை
மன்றாடி குரவனிவ னென்றுகை குவித்தார் (59)
நிறை கற்பூர தீபங்கொடுத்து ஞான
கர்த்தனே யென்றுபல மெய்த்துதி தொடுத்து
நாளும் அற்பூரு புகழ்செவி மடுத்துத் தம்மை
அனவரத முந்துயர்செய் வினைவலி கெடுத்து (60)
மாவி பூதிதர விருகையால் வாங்கிப் பூசிப்
புள்ளிமயி லோனருளை யுள்ளமிசை தாங்கி
மிக்க நீதியுடை யாரங்கு நீங்கித் தத்தம்
நிதிபெருகு மில்லமுற் றதிமகிழ்வி னோங்கி (61)
மேலாம் உம்பர்தள கர்த்தனடித் தொண்டார் அன்பர்
ஒக்கலோ டிருந்துபல வர்க்கவமு துண்டார்
அன்பர் நம்பிரா னருளையுட் கொண்டார் அன்றி
ராவகல வெம்பரிதி தேர்வருதல் கண்டார் (62)
அந்த இன்றுபுனர் பூசநா ளென்றார் கந்தன்
இன்னருட் டுணைபடியை யுன்னிநதி சென்றார்
சென்று நன்றுபைம் புனலாடி நின்றார் பாவ
நாசஞ்செய் வெண்ணீறு பூசிமகிழ் கின்றார் (63)

மிக வெண்பட்டி னுடையிடை வனைந்து மிக்க
விலையேறும் பொற்றாசு தலையிற் புனைந்து
அடியர் யெண்பட்ட குகனரு ணினைந்து யென்று
மீறிலா னினியவருள் வாரியு ணனைந்து (64)

செம் பொன்கொண் டிரத்தினமிலங்கச் செய்து
பொங்கொளி மிருங்கெவுரி சங்கந் துலங்க
யெழு நன்கொண்ட னேர்கர தலங்க டம்மி
னவமணியி னழிகண் டவர்மதி கலங்க (65)

மகர கண்டிகை சரப்பணிக ளின்ன யிரு
காதணிகள் பலகோடி யாதவரின் மின்ன
இவர்க்கு மண்டலத் தெவர்கணிக ளென்னக் கண்ட
மானவர்கள் விண்ணிலுறை வானவர்கள் பன்ன(66

மிகச் சிங்காரஞ் செய்துவரு கின்றார் தேவ
தேவனுறை யாலயத் தாவலொடு சென்றார்
நமது கங்காளன் மகன்முன்பு நின்றார் தங்கள்
கைதலை முகிழ்த்துதவி செய்திடுதி யென்றார் (67)

நல்ல வெள்ளியாற் செய்ரத மீதே வேத
வித்தகப் பெருமானை வைத்தனரப் போதே
கூர் அள்ளிலையயிற்கண் மட மாதே நம்மை
யாளுமுரு கையனையெ நாளுமற வாதே (68)

தொண்டர் அன்பினொடு காவடி யெடுத்தார் நங்கள்
ஆறுமுக னேறிவரு தேரரு கடுத்தார்
பல துன்பமவினை யென்பவை கெடுத்தார் நறுந்
தோடலர்க டம்பனிசை பாடத் தொடுத்தார் (69)

கான அங்குவரு வார்கட் கினிக்கக் கண்ட
அன்புடைய தொண்டருக் கின்பஞ் செனிக்க
வான மங்குல்முர சொலிகண்டு பணிக்க வந்தான்
வன்னமயி லோனென்று சின்னந் தொனிக்க (70)

மிக மீறுபல முரசொலிக ளதிரக் கேட்ட
விண்ணகத் துடிநிரைகண் மண்ணகத் துதிர
வேறு மாறில்பல வண்டங்கள் பிதிர வெங்கு
மாசில்விப் பிரர்நின்று பேசுமறை முதிர (71)

பசும் பண்ணீர் மொழிக்குறவர் துய்ய பாவை
பண்பொடு கலக்கவரு நண்புடைய மெய்ய
செழுந் தண்ணீர் மலைக்குள்வள ரைய வென்று
தவமேவு மெய்யன்பர் சிவநாமஞ் செய்ய (72)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
TAMIL NADU - INDIA

கமலப் பூமாதர் கண்டுகளி கூட நின்ற
பூவையனை யார்முன்பு மேவிநட மாட
தமிழ்ப் பாமாலை பாவாணர் பாடக் கண்டு
பணிபவர் பெரும்பவப் பிணியலறி யோட (73)

ஐயன் இருபாலும் வெண்கவரி துள்ள முத்தின்
இயன்மணி முழுக்கவிகை வியன்மதியை யெள்ள
பல பொருமணிச் சிவிறிநிரை கொள்ளச் செய்ய
பொன்னால வட்டநிரை மின்னலொளி தள்ள (74)

உயர் தங்கமலை யுந்தலை துளக்கக் கந்த
சாமிவரு பவனியிவை யாமென விளக்க
மிகப் பொங்குமதிர் வேட்டொலி முழக்கக் கோழிப்
புண்ணியக் கொடிநின்று விண்ணினை யளக்க (75)

இரு சேவடி துதித்தன்பர் படர யிர
சிதவையம் வெண்மதிக் கதிரெனச் சுடர
சித்ரக் காவடிகள் பின்சென்று தொடர வேக
கர்த்தனிவ னென்று பலர் சுற்றிவந் தடர (76)

அடி மாதரசியே யிங்கு வாராய் மால்
மருகனூர் வெள்ளிரதம் வருமகிமை பாராய்
யென் காதலியே கண்கொண்டு நேராய்க் கண்டு
கைதொழு திறைஞ்சிமுன் செய்பவந் தீராய் (77)

கலைச் சந்திர விமானமென லாமோ முக்கட்
சாமியுறை கைலைவரை யாமெனப் போமோ
விண் இந்திர விமானநிக ராமோ சுந்த
னேறிவரு தேரழகு கூறுவது நாமோ (78)

இதனைப் பகரவா யிரநாவும் வேணும் காணா
பண்ணவர்க் கிறையெனக் கண்ணில்லைக் காணும
அடி நிகரின்மா மதனுமயல் பூணுந் தெய்வ
நேரிழாய் நீவந்து பாரடி தோணும் (79)

இந்த வெள்ளிரத மீதுநிறை மெய்யன் வெற்றி
வேலணி கரத்தனனு கூலனமை தையன்
குற வள்ளிதெய் வானைமகிழ் துய்யன் தண்ணீர்
மாமலையை நோக்கியே சாமிமுரு கையன் (80)

கல்ல திருவீதி வலம்வருகி றானே அந்தச்
செல்வமலி தருமறுகி னல்வளந் தானே
யென் ஒருநாவி னுரைசெய்ய மானே நெஞ்ச
மொடுங்குதே யாயினுஞ் சொல்வனடி நானே (81)

| | | | |
|---|---|---|---|
| இஃது | பட்டுவிலை சொல்பவர்கள் கூட்டம் | அங்கு | |
| | பாரிய மணிக்குவிலை கூறுவோ ரீட்டம் | | |
| இங்கே | கட்டுதுகில் விற்பவர்க ளோட்டம் | பொற் | |
| | காசொடு பணங்கண்டு பேசுவர்க ளோட்டம் | | (82) |
| நவ | ரத்தினம் விற்குமிட மீதே | யிங்கு | |
| | நாகரு முவப்பவுறு போகமக லாதே | | |
| இவைகள் | சித்திரத் திருவீதி மாதே | ஆதி | |
| | சேடற்கு மிதன்மகிமை பாடற் கொணாதே | | (83) |
| கலவைச் | சந்தனங் கத்தூரி விற்பார் | பல | |
| | சாத்திர புராணங்கள் பார்த்தினிது கற்பார் | | |
| மிகு | கந்தமலர் விலைகூறி நிற்பார் | கற் | |
| | கண்டொடு கருமபினைக் கொண்டுபகர் கிற்பார் | | (84) |
| ஐயன் | இவ்வளத திருமறு கடுத்தான் | கந்த | |
| | னேத்துமடி யார்கள்வினை தீர்த்தருள் கொடுத்தான் | | |
| போரில் | தெவ்வர்புற கிடவயில் விடுத்தான் | அன்பர் | |
| | செஞ்சொலி னிசைப்பனு வலஞ்செவி மடுத்தான்) | | |
| பல | இன்னிய மியம்பிட நடந்தே | வெள்ளி | |
| | யிரதங்கடா விமுழு வரதன் படர்ந்தே | | |
| மிக | மின்னுமணி வீதிபல கடந்தே | தண்ணீர் | |
| | வெற்பதனை நோக்கிநிறை யற்பொடு தொடர்ந்தே) | | |
| சித்ரக் | காவடிகள் பின்வரச் சென்றான் | கால் | |
| | காலனனுகூலனுயர் சீலனருள் குன்றான் | | |
| கொடுந் | தீவினைசெய் புரமெரிய வென்றான் | வேதன் | |
| | றிருமாலு மறிவரிய வுருவாகி நின்றான் | | (87) |
| அழல் | மிக்கவிட மமுதாக வுண்டான் | நெற்றி | |
| | விழியழல் கொளுத்திமத னழிவுறக் கண்டான் | | |
| முன்பு | நக்கமறை யின்பயனை விண்டான் | ஆதி | |
| | சத்தியை யிடப்பாக முற்றிடக் கொண்டான் | | (88) |
| தில்லை | மன்றினட மாடுமுமை பாகன் | வெள்ளை | |
| | வாரணக் கடவுள்பழி தீரவருள் யோகன் | | |
| கையில் | வென்றிமழு மானணிவை போகன் | பாச | |
| | வினைகெடுத் தன்பர்மன நினைவிலுறை யேகன் | | (89) |
| கடுங் | காலனை யடர்த்த பொற் பாதன் | யானைக் | |
| | கஞ்சுகப் போர்வையணி பஞ்சமுக நாதன் | | |
| மறைப் | பாலனைக் காத்தருள்செய் நீதன் | பரவை | |
| | படர்மனையொ ரிரவிலிரு தடவைவரு தூதன் | | (90) |

ஈசன் அன்பினுறை யாலயந்தானே கோடி
யருக்கரை நிகர்த்திங் கிருக்குதிடி மானே
ஆடி இன்பரச மேபருகுந் தேனே பல
வின்னிய மதிர்ந்திடப் பன்னிருகை யானே (91)

நல்ல குலவணிகர் துதிசெவி மடுத்தான் கண்டு
கும்பிடுமெ யன்பருக் கின்பங் கொடுத்தான்
பொங் அலைசுவற வேலன் றெடுத்தான் தந்தை
யனைமேவு மாலையமி தெனவங் கடுத்தான் (92)

சிவ சன்னிதிக் கெதிராக வந்தான் கந்த
சாமிநெய் வேதன நேமமொ டுகந்தான்
அருள் நன்னிதி யெவர்க்குநனி தந்தான் யிந்த
நானில மதிக்கமுரு கோனருள் புரிந்தான் (93)

காட குஞ்சர வதட்போர்வை யுடையான பசுங்
கூவிளத் தோடறுகு மேவுபொற் சடையான்
கொடும் நஞ்சணிக ளத்தன்வெள் விடையான் கைலை
நாயகன் றியரைக் காய்மழுப படையான் (94)

பொன் ஆலயத் தன்பர்கள் புகுந்தார் கங்கை
யாறணி சடைக்கடவுள் சீர்கண் டுகந்தார்
மிக்க சீலமொடு பிரகாரம் வந்தார் தேவ
தேவனுமை பாகனிரு சேவடி பணிந்தார் (95)

அன்பர் விடைகொடு வணங்கி நனி சென்றார் மிக்க
வேடிகை யாகவிளை யாடிவரு கின்றார்
மாதே அடலயிற் குமரன்முன் னின்றார் முக்க
ணத்தன்மக னேகிருபை வைத்தருளு மென்றார் (96)

நாளும் அண்டர்புகழ் புனல்வரையை நாடி முரு
கையன்ரதம வருகுதொரு சையமென வோடி
மெய்த் தொண்டுசெயு மன்பரொடு கூடிப் பசுந்
தோகையே நாமுமங் கேகுவோம் வாடி (97)

ஆடி நேரிழாய் பூஞ்சோலை பாராய் வானி
னீடுமுகில் கண்டுமயி லாடுதடி நேராய்
மழை மாரியென மதுவொழுகு தாராய் வரி
வண்டுகளி னிசைபாடல் கண்டுகளி கூராய் (98)

மாதர் அஞ்சிறைப பைங்கிளிகள் பாடும் பெண்
ணன்றிலொடு சேவல்பிரி வின்றியே கூடும்
மத குஞ்சரக் குருளையரி யோடும் கூடிக்
கொண்டுநின் றேபகைமை யின்றிவிளை யாடும் (99)

பசும் பண்ணிசை யெனக்குயில்கள் கூவும் கொன்றை
பரிசுதவு மாறென்ன விரிமலர்கடூவும்
மிக உண்ணிறை வளத்தின்மிகு காவும் சேட
னுற்றோத வெண்ணினும் பற்றாது நாவும் (100)

பெண்ணே நங்குமர னருள்வழியி னின்றார் குரு
நாதனுமை பாலனொடு பாதைவழி சென்றார்
வளம் பொங்கிய வனம்பல வகன்றார் நங்கள்
புனல்வரைத் திருமட மினியணித் தென்றார் (101)

கஞ்சப் பூவிலுறை பொன்னொத்த தேவி தண்ணீர்ப்
பூங்கிரிக் குமரவேள் பாங்குட னவாவி
ஐயன் மேவுபொன் னாலயத் தூவி கோடி
விரிகதிர்ப் பருதியிற் றெரியுதடி சேவி (102)

தூய அன்னமே தனமங்க ளாடும் விண்
ணமரருள மறுசுவைத் தமுதுண்ண நாடும்
வரிப் பொன்னளிகள் சோலையிற் பாடும் முப்
புவனவா சிகளுமிக் குவகையொடு கூடும் (103)

செந் திருமருக னதிவிரைவில் வந்தான் இர
சிதமுற் றிலங்கொளியி ரதம்விட் டிழிந்தான்
தமது பொருவில்செம் பொற்றளி புகுந்தா னன்பர்
போற்றிசெய வரியணையில் வீற்றினி திருந்தான் ()

அட்ட திக்கிறைவர் பணிதகனைத் தேடி பாலின்
சீரான காவடிக ளீராறு கோடி

பல சர்க்கரைக் காவடிக ளாடி யிங்கு
தான்வருதல் பாரடிநின் மான்விழிக ளாடி (105)

அடீ அதிவிர்த சுரதமிகும் ரதியே மிக்
கருமைபெறு காவடிப்பெருமைதனை மதியே
தேவர் துதிகுமர னடிமனதிற் பதியே நான்கு
சுருதிமுத லோனமக் கருளுநற் கதியே (106)

சித்ரக் காவடிகொ டன்பர்மகிழ் வாகி லோக
கர்த்தனார் மேவிய திருத்தளியு ளேகி
மிக்க சேவுறு கொடிப்பரம யோகி தந்த
சேயடி வணங்கிமெய்த் தூயடியர் போகி (107)

யாரும் வந்தனைசெய் போதனே சரணம் வேத
மாதவர் வணங்குமிரு பாதனே சரணம்
மிக விந்தைபெறு நீதனே சரண முக்கண்
வேதியர்க் கருள்செய்குரு நாதனே சரணம் (108)

எங்கள் கன்னியுமை பாலனே சரணம். கால
காலனார் பெற்றகுண சீலனே சரணம்
நல்ல பன்னிருகை வேலனே சரணம் கங்கை
பாலனே வணிகரனு கூலனே சரணம் (109)

அன்பர் அரகரா வென்றுவலம் வந்து யெங்க
ளாறுமுகனே யென்று கூறுதுதி தந்து
ஜதி பாவியே சந்நிதி யணைந்து முன்பு
பத்தியொடு காவடியை வைத்தனர் பணிந்து (110)

பர முத்திரு மத்தனடி கண்டார் யாரும்
முன்புண வளித்தமுது பின்பினிதி ஹுண்டார்
நிறை பக்தியாளி மொய்த்தவைந் தண்டார தாங்கு
பன்னிரு புயத்தனரு டன்னையுட் கொண்டார் (111)

அடி கோதையார்க் கரசிபோ வருதி மேலைக்
குன்றதனை நாடியோ சென்றனல் வெம் பருதி
செய்த தீதகல முருகனையுட் கருதி யிந்தச்
சீர்த்திபுள மண்டபம் பார்த்துவகை பெறுதி (112)

ஒளிர் வச்சிரக் தூண்கள்பல துன்னும் செம்
மணிகொண் டிழைத்தபல கணிகளதின் மன்னும்
புவி மெச்சுதுகி ருக்தர மின்னும் வாள்
விட்டிலகு பொற்பலகை யிட்டொளிரு மின்னும் ()

அதிற் பலகோடி பதுமைக ணடிக்கும் பொற்
பந்தென வசைந்துசில பந்தம் பிடிக்கும்
சில சிலபதுமை மத்தள மடிக்கும் சில
சிலபதுமை யேழிசையி னலமே படிக்கும் (114)

செழுஞ் சீர்க்கன்னல் வாழைகமுகெங்கும் நவ
சித்திர மணித்தீப முற்றொளி தயங்கும்
பல தார்க்கடி மலர்த்தொடைக டொங்கும் பொற்
றங்கஞ்செய் பூர்ணகல சங்கள்பல தங்கும் (115)

கமலப் பூமாதர் போற்றவரு பெண்ணே தேவர்
பொற்பதி யிடத்தினு மொப்பிலென் றெண்ணே
மதன காமரசமே யானது கண்ணே ஞான
கர்த்தனரு ளித்தமனம் வைத்துறுதி பண்ணே ()

செல்வத் தனவணிகர் யாருமொரு மித்து அன்னந்
தருமமிகை காணவே வருபவனை யொத்து
கட்டித் தினகரக் கடவுள்கண் விழித்துப் பசிய
செழும்புரவி வையத் தெழுந்தன னுதித்து (117)

தன வணிகர்க ளெலாமகிழ்விற் கூடி யின்று
வாழ்வுதவு தைப்பூச நாளெனக்கொண் டாடி
முழு மணிபொருத்த வாலரிக ளூடிப் பல
வகையமு தமைத்தாறு முகன்மகிமை பாடி (118)

அந்த வந்தவ ரெவர்க்குமினி தன்னம் பழ
வர்க்கவடை பாயசஞ் சர்க்கரைநெய் முன்னம்
பெண்ணே தந்தளித் தார்கள்பின் சொன்னம் பின்பு
தாங்களு மருந்திமகிழ் வொங்கினார் தென்னம் ()

தென்னம் பிஞ்சஞ்சு கஞ்சமுலை மாதே யன்று
பின்னுளி லாயிலிய நன்னாளப போதே
மிக நெஞ்சுவந் தன்பரக லாதே கூடி
நித்தன்மக னருளை வைத்துமன மீதே (120)

கங்கை நீராடி நீறிட் டடுத்தார் பொன்செய்
நீண்மணிக் காவடியைத் தோண்மீ தெடுத்தார்
நாளும் தீராத பழவினை விடுத்தார் தேவர்
தேடரிய குகன்மகிமை பாடத் தொடுத்தார் (121)

பாரா சத்திதரு துய்யனே போற்றி யிரு
தையலர் மணந்தவெம தய்யனே போற்றி
தவ சித்தர்பணி மெய்யனே போற்றி பூஞ்
செய்யபத மப்பனிரு கையனே போற்றி (122)

வெற்றி வீரமா யூரனே பொற்றி வேலை
வீரைவற ளத்தொட்ட தீரனே போற்றி
கொடுஞ் சூரசம் மாரனே போற்றி ஞான
சூரிய னிகர்த்தசிங் காரனே போற்றி (123)

போற்றி என்றுபல வகைதுதி புகன்று ரைய
னிலகுபொற் றளியையுமே வலமுறச் சென்றார்
தேவர் துன்றுசந் நிதிமுன்பு நின்றார் பரி
சுத்தனே கிருபைபா லித்தருளு மென்றார் (124)

தோளிற் காவடி யிறக்கிமுன் வைத்தார் பொற்
கழல்பணிந் தன்பர்தம் பழவினை சிதைத்தார்
இளங் கோவணிசர் பலபுக ழிசைத்தார் வெற்றி
கூரயிற் குமரவே ளாரரு ணினைத்தார் (125)

பொற் கலசததின் முத்திரை பிரித்தார் சர்க்
கரையைமலை யிற்குவித் தரவொலி விரித்தார்
பல பலபழக் குலைவேச கரித்தார் மிக்க
பயனல் கபிடேக மதுசெயவா தரித்தார் (126)

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

பகன் கோத்தேனு முக்கனியுங் கூட்டிக் குமர
குருபரற் கபிடேக மருமைபெற வாட்டி
எம்மைக் காத்தருளு மென்றுபா ராட்டிச் சிங்
காரமிகு சோடசோப சாரமது காட்டி (127)

அன்பர் தெரிசனஞ் செய்தடி பணிந்தார் செல்வத்
திருநீறு பெற்றழகு தருநுத லணிந்தார்
மிக அரிதங் ககன்றனர் துணிந்தா ரன்ப
ரறுசுவையி னமுதையுண் டுறுபசி தணிந்தார் (128)

அடி நிகரறுபொன் மேனிசண் பகமே கொண்ட
னேரிழாய் மதுரமொழி கூறுமஞ் சுகமே
பெண்ணே திகழுமது நாளில்வரு மகமே கண்டு
தெள்ளுநிதி வணிகேசர் வெள்ளிமா நகமே (129)

கைலை போன்றவிர சிதவைய மீதே தேவர்
போற்றவள ரறுமுகனை யேற்றினரப் போதே
சூல் யென்றமுகில் வெள்கு குழன் மாதே காண
வெண்கொளீ ராயிரங் கண்கள்போ தாதே (130)

வெண் சாமரைக ளிருபாலும் போட மாதர்
தத்திமித் தோமென்று நிர்த்தங்க ளாட
இப் பூமடப் பெண்கள்சுதி கூட வன்பர்
புள்ளிமயி லேறிவரும் வள்ளல்புகழ் பாட (131)

பல பலகோடி தீவர்த்தி யிலங்கக் கோடி
பகல்வர்த்தி நின்றுதக தகெனத் துலங்க
வானில் நிலவுசெங் கதிர்கண் கலங்கப் பாத
நிழலடைந் தவர்கள்செய் பழவினை விலங்க (132)

விண்ணில் வானவர்கள் மலர்மாரி தூற்றச் செங்கண்
மாலயன் வணங்கியிரு பாலினும் போற்ற
நல்ல கானவிசை கந்தருவர் சாற்ற வன்பர்
கைதலை முகிழ்த்துமுன் செய்தபவ மாற்ற (133)

விண்ணில் விசுபா ணங்கள்பல பிடிக்கப் பார்த்த
விண்ணகத் தமரரிரு கண்ணிணை துடிக்க
பெண்ணே மாசிலதிர் வேட்டொலிவி ணிடிக்கப் பொன்
மாமலை யசைந்துபந் தாமென நடிக்க (134)

தொடு நாகபா ணம்பல தொடுக்கக் கோடி
நாராச பாணங்கள் நேரே யெடுக்க
அதி மோகபா ணம்பல விடுக்க வாறு
முகநாதன் வெள்ளிரத நகரே யடுக்க (135)

ஈதோ வந்ததடி வந்ததடி மானே நாமும்
வந்தனைசெய் வோம்வாடி யுய்ந்திடத் தானே
பெண்ணே அந்தரத மீதில்வரு வோனே நம்மை
யாளுதற் கின்னகரில் வாழுமுரு கோனே (136)

புள்ளி மயிலோனை யன்பர்கள் தொடர்ந்தார் செல்வ
வணிகரும் வணங்கியணி யணியாய் நடந்தார்
பசும் புயமுவு சோலைகள் கடந்தார மிகப்
பொற்புறு பிணங்கென்னு நற்பதி படர்ந்தார் (137)

வெற்றி வீரவே லத்தத் துகந்தான் கோயில்
வீட்டிற்கு முன்பணிரு நாட்டத்தன் வந்தான்
வெள்ளித் தேரினி லிழிந்துட புகுந்தான் யார்க்கும்
தேடரும்பொ னவமணிப் பீடத் திருந்தான் (138)

புகழ் வாய்த்தவணி கேசர்சுரர் பதியே யெங்கள்
மாறில்பவம நீக்கியருள் வேறில்லைக் கதியே
எம்மைக் காத்தருள விதுநல்ல ததியே யென்று
கைதலை குவித்தினிது செய்தார்கள் துதியே (139)

மாவி பூதிபிர சாதமது வாங்கி நுதலிற்
பூசிவடி வேலர்புகழ் பேசிவிடை தாங்கி
பெண்ணே கோதில்வணி கேசாமகிழ் வோங்கித் தத்தங்
குன்றனைய மாளிகையிற் சென்றனர்கள் பாங்கி (140)

இந்தப் புனல்வரைக் குமரேசர் வாழி யிப்
புவனமுயர் ககனமெய்ச் சிவநேசர் வாழி
செல்வத் தனமலிநல் வணிகேசர் வாழி மிக்க
தகவினர் மதிக்குமிந் நகர்வாசர் வாழி (141)

புள்ளி மயில்வாழி வடிவேலும் வாழி கான
மான்மக டெய்வானைபத மேன்மேலும் வாழி
இங்கு பயிலகுமர னிருகாலும் வாழி மிக்க
பன்னூ லுணர்ந்தவரு மிந்நூலும் வாழி (142)

முற்றுப்பெற்றது.

மெய்கண்ட தேசிகன் றிருவடி வாழ்க.

## எச்சரீக்கை.

மாலிதியாலன காதிபனுமென வாழ்வணி கேசர்தொழு-மலர்
ஆனனமாறுடை யாய்புனன்மால்வரை யாள்குரு தேசிகனே)
நாரணனுன்முக னுதியவானவர் நாடரு நாயகனே செக
காரணனேபுனன் மால்வரைமேவுகு காவுமை பாலகனே (2)
நீறணிமேனிய ராயிருதாள்பணி நேசரை யாள்பவனே-விறல்
ஆறிருதோளுடை யாய்புனன்மால்வரை யாளறு மாமுகனே)
இந்திரன்மாமகள் சந்தணிவார்முலை யின்புற வார்புயனே
யொளிர்
சந்திரனீண்முக விந்துதணீர்மலை தங்கு தயாபரனே (4)
சோமுறைகோடிய சூர்முதன்மார்பிரு கூறுசெய்வேலவனே
சுரர்
காமுறுநீர்வழி மால்வரைமேவுகு காவுமை பாலகனே (5)
காழியினுன்மறை வேதியர்பால்வரு கார்மயில் வாகனனே
வாழி
வாழிசதாசிவ தேசிகனேபுனன் மால்வரை வானவனே (5)

### வேறு.

கோலப்புனல்வரைமேவிய குகனே யுமைமகனே முழு
மூலப்பொரு ளிலையேயறு முகனே யெச்சரீக்கை (7)
கானக்குற மடமானனை கந்தாவுமை மைந்தா நெடு
வானப்பொரு புனன்மால்வரை வந்தா யெச்சரீக்கை (8)
தெண்ணீர்வரு மழுவேதயுமை சேயேயருள் வாயே யுயர்
தண்ணீர்மலை தனின்மேவிய தாயே யெச்சரீக்கை (9)
சைவப்பொருண் முதலேகதி தாவேசுரர் காவே பெருந்
தெய்வப்புனல் வரைமேவிய தேவே யெச்சரீக்கை (10)
நேம்புனல் வரைமேவிய நேசாமுரு கேசா பலர்
காம்புக முடையாய்பவ நாசா வெச்சரீக்கை (11)
பற்றற்றவர் தமையாளுமை பாலாவனு கூலா மணி
வெற்றிப்புனல் வரைமேவிய வேலா வெச்சரீக்கை (12)

---

## கட்டியம்

சண்டப்ரசண்ட பிதண்ட மூதண்ட கோதண்ட பாணிக் குமருகன், தத்திமித்தாளமோ டொத்துநின் ருடல்புரி சதா சிவன் பெற்றமுருகன், தண்டமிழ்நிறைந்திடு மண்டரும் முனிவருந் தான்வணங்கிய வேலவன், சாலோக சாமீப சாரூப சாயுஜ்ஜிய சகலமோக்ஷாதிகார கர்த்தன். அஹோ எப்படியென்றால் சாக்ஷாத் பரப்பிர்ம மூர்த்திக்குப் புத்திரனாகியும் ஸ்ரீமன் நாராயணமூர்த்திக்கு மருமகனாகியும் விநாயகமூர்த்திக்குச்சகோதரனாகியும் வள்ளிதெய்வானைக்குமணவாளனாகியும் ஆயிரத்தெட் டண்டமும் யிருநூற்றிருபத்துநான்கு புவனமும் யெட்டுத்திக்கும் பதினாறுகோணமும் சப்தசாகரஞ் சூழ்ந்த ஈரேழு பதினாலுலகமும் ஏகசக்கர நடாத்தி ஒப்பற்றசந்திரவட்டக் குடையின்கீழ் ஆட்சிசெய்கின்ற பிணங்குத் தெண்டாயுதபாணி இன்றுதினம் அன்னக்கொடிகட்டி அனைவோரையுங் காத்தருளுவோமென்று தீர்த்தப்ரசாத விபூதியுங்கொடுத்து அனேக விதமான ஆடல்பாடல்களுடன் தஞ்சமாநகரத்தினின்றும் வெள்ளி யிந்திரவிமானத்தி லாரோகணித்து அன்னதானம் சொன்னதானம் வஸ்திரதானம் கோதானம் பூதானமுதலிய தானங்களும் செய்வதற்காக தண்ணீர்மாமலையில் விண்ணளவோங்க வெண்ணிலாவணிகர் பொன்னினாற்செய்த புனிதவாலயத்தில் முத்துடன்வயிரம் வைத்தினிதிழைத்த இரத்தின சிம்மாசனக்கொலுவிற்குயெழுந்தருளியிருக்கின்றார் வெகுபராக் கெச்சரீக்கை.

முற்றுப்பெற்றது.

———:0:———